திரு. க. சுப்பு : கடிதம் எழுதப்பட்டதாக பத்திரிகையில் செய்தி வந்தது; அப்படியானால் முதலமைச்சருக்கு அல்லது அமைச்சருக்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : என்னுடைய கவனத்திற்கு வந்தது திரு. சுப்பு அவர்கள் கொடுத்திருப்பதுதான்.

(5) புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்கள் கடத்தப் பெறுவது குறித்து—(தொடர்ச்சி).

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, மதுரை மாவட்டம், கொடைக்கானல் தாலூகா, பாச்சலூர் கிராமத்தில் ஓடைப் புறம்போக்கு ஊமையாறு என்னும் ஆற்றுப் புறம்போக்கு, சுடுகாட்டுப் புறம்போக்கு போன்ற அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்களிலுள்ள லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள நெல்லறை, பல ஜாதி மரங்கள் அனைத்தையும் சில நபர்கள் வெட்டி லாரிகளில் ஏற்றிக் கடத்திச் செல்வதால் எழுந்துள்ள நெருக்கடியான நிலை குறித்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே சொல்லிவிடுகிறேன்; விவர அறிக்கை அவையில் முன்பே வைக்கப்பெற்றுள்ளது.

(4) அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு சட்ட முன் வடிவுகள் நிகழ்ச்சி நிரலில் பாக்கி இருக்கின்றன. அவற்றை எடுத்துக் கொண்டு முடித்தவுடன், விதி 42,41 இன் கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளவர்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவரிடமும் கேட்டேன் பிற்பகல் 2 மணியானாலும் பரவாயில்லையென்றார்கள். எனவே நிகழ்ச்சி நிரலில் உள்ளதை முதலில் எடுத்துக் கொள்வோம். மற்றவைகளை பின்னர் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னபடி எல்லோருக்கும் அந்த மாதிரி வாய்ப்புகள் கொடுக்கப்படுவது என்பது சம்பந்தமாக நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் நீங்கள் கொடுப்பதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கு தகவலோடு வரவேண்டும் என்று நீங்கள் சொல்லி விட்டால் நல்லது. கும்பகோணம் தொழுநோய் ஆஸ்பத்திரிமூடப்பட்டிருப்பதினால், அதன் விளைவாக........

[1979 நவம்பர் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலையிலே எனது அறையிலே சொன்ன விஷயம்தானே, அதை மட்டும் எழுப்புங்கள். அமைச்சர் முடியுமானால் பதில் தயாரித்துக் கொண்டு வரட்டும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நானும் மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் கொடுத்திருக்கிற படி கும்பகோணத்தில் இருக்கிற தொழுநோய் ஆஸ்பத்திரி மூடப்பட்டிருப்பதால் 20,000 தொழு நோய் நோயாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 50 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லி 'கால் அட்டென்ஷன்' கொடுத்து, நீங்களும் அதை நல்ல முறையிலே அட்மிட் செய்தீர்கள். அமைச்சருக்கு 5-ம் தேதிய நோட்டீஸ் கொடுத்தாகி விட்டது, ரிப்ளை வேண்டும் என்று. ஆனால் வரவில்லை மறுபடியும் உங்கள் அலுவலகத்திலிருந்து 9 ஆம் தேதி எடுத்துக் கொள்ளப்போகிறோம், ரிப்ளை வேண்டும் என்று சொல்லி அனுப்பியிருக்கிறீர்கள். ஆனால் ரிப்ளை வரவில்லை, என்று கேள்வி படுகிறேன். அது ரொம்ப வேதனைக்குரியது. தொழுநோய் நோயாளிகள் பாதிக்கப்படக் கூடிய பிரச்னையை அமைச்சர் இவ்வளவு மெத்தனமாக எடுத்துக் கொள்வது சரியல்ல. ஆகவே இன்றைக்கு இந்த அவை முடிவதற்குள்ளாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியயாக வேண்டும். என்று தாங்கள் உத்தரவிடவேண்டும். உங்களுக்கு அதற்கு பவர் இருக்கிறது. அதற்கான ரூலிங்கை நான் கையிலே வைத்திருக்கிறேன். அமைச்சர் அப்படி அதை சேலன்ஞ் செய்தால் எடுத்துக் காட்டுகிறேன். ஆகவே தயவு செய்து தகவலை கொண்டு வரவேண்டும் என்று நீங்கள் ஆணையிட வேண்டும். அதற்குப்பின்னால் எல்லாவற்றையும் எடுக்கும்போது இதையும் எடுத்துக் கொள்ளலாம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் எழுப்பியதை அவர்கள் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும் என்றுதான் அனுமதித்ததேன். அமைச்சர் அவர்களை கொண்டு வாருங்கள் முடிந்தால் என்றுதான் நான் சொல்லலாம். ஆனால் கட்டாயப் படுத்தியோ கொண்டு வரவேண்டும் என்று நிர்ப்பந்திக்க முடியாது. அதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது.

(திரு. உமாநாத் எழுந்திருக்கிறார்...

மாண்புமிகு பேரவைத்தலைவர் : உட்காருங்கள். நான் அமைச்சரையே கேட்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்அவர்கள் இது குறித்து என்ன சொல்ல விரும்புகிறார்?

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: திரு. செ. இராமலிங்கம் ஆகியோர் எழுந்து நிற்கின்றனர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரெ. வீ. சவுந்திர ராசன், திரு. ராமலிங்கம் ஆகியோரும் கொடுத்திருக்கின்றனர். அதை பதிவுசெய்வார்கள். அமருங்கள்....

(திரு. மா. மணிமாறன் எழுந்து நிற்கிறார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, திரு மணிமாறன் அவர்கள் கூட கொடுத்திருக்கிறார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இப்போதாவது பதில் சொல்லட்டும். அவரை பேசவிடுங்கள்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, அவை முடிவதற்குள் தகவல் தந்து விடுகிறேன்.

திரு. செ. இராமலிங்கம்: நான் 2 விஷயங்களைப் பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் என்ன சொல்கிறேன் என்பதையே புரிந்துகொள்ள மாட்டேன் என்கிறீர்கள். அவற்றை இப்போது நான் அதை எடுக்கப்போவதில்லை. அனுமதி கொடுத்து தகவல் வரவில்லையென்றால் அவற்றை பதிவு செய்வதற்காக அனுமதித்தேன். அனுமதி மறுக்கப் பட்டவைகளை இங்கே பதிவு செய்வதற்குக்கூட எழுப்ப அனுமதியே கிடையாது. ஆகவே உட்காருங்கள்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல் கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு) 1979.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே,

"1979-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 76/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்"

என்று மொழிகிறேன்.

---

* ....1979, நவம்பர் 7-ம் தேதியை தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.